புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜுன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# சிறார் இலக்கிய ஏற்பும் வாசிப்பு இடைவெளியும்

முனைவர் பா. இராஜ்குமார்,
துறைத்தலைவர் & இணைப்பேராசிரியர்
தமிழாய்வுத்துறை,பிஷப் ஹீபர் கல்லூரி (தன்னாட்சி),திருச்சிராப்பள்ளி.

ஆய்வுச் சுருக்கம்

இன்றையச் சூழலில் சிறுவர்களின் அகமனச்சூழலை பெரிதும் ஆட்கொண்டிருப்பது புறக்காரணிகளே. பெற்றோர்களின் அன்புச் சூழலையும் ஆசிரியர்களின் அறிவுச் சூழலையும் கடந்து பிற புறச்சூழல்கள் தான் இன்றைய சிறுவர்களின் வாழ்க்கை முறையைத் தீர்மானிக்கும் காரணிகளாக அமைகின்றன. உலகத்தைக் கதவு திறந்து காட்டும் கையடக்க கருவிக்குள் தன்னை அடக்கமாக்கிக் கொண்டு உணர்வுகளை மட்டுமே உற்சாகப்படுத்திக் கொண்டிருக்கின்றனர்.

அறிவு வயப்படும் வாய்ப்பற்றவர்களாக வலம் வருவதால் தான் சிறுவர்களின் குறிப்பாக மாணவர்களின் ஆளுமை வளர்சசி ஒற்றை முனையிலேயே நின்றுவிடுகிறது. பன்முகத்தன்மையிலான வளர்ச்சிக்கு வழியறியாத நிலையினால்தான் சிறுவயதிலேயே மன அழுத்தங்கள், வன்முறைகள், தற்கொலைகள், குடும்பத்தில் இணக்கமின்மை போன்ற விரும்பத்தகாத விளைவுகள் நாளும் வளர்ந்துகொண்டே இருக்கின்றன. மேற்சொன்ன எதிர்மறைப் போக்குகளை விமரிசனம் செய்வதை விடுத்து சிறுவர்களுக்கான ஆளுமை வளர்ச்சிக் குறித்து நேர்முறைச் சிந்தனை அடிப்படையிலான ஆய்வை முன் வைக்கிறது இக்கட்டுரை.

சிறார் இலக்கியங்கள் மாணவர்களின் பன்முக ஆளுமை வளர்ச்சியில் முக்கியப் பங்காற்ற முடியும் என்பதை கருதுகோளாகக் கொண்டு இக்கட்டுரை அமைகிறது. பாட்டிகளிடம் கதை கேட்கும் அனுபவத்திலிருந்து அவர்களுக்கான இலக்கியப் பயணம் தொடங்குகின்றது. அத்தகைய இலக்கிய வாசிப்பிற்கும் சிறுவர்களுக்குமான இடைவெளியை கள ஆய்வின் வழி எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகிறது.

திறவுச் சொற்கள்

சிறார் இலக்கியம், பன்முக ஆளுமை, உணர்வுசார் மேலாண்மை, பாட்டிக் கதைகள், கதைசொல்லி, கல்வி வன்முறை, உண்மை அறிவு.

இன்றையச் சூழலில் சிறுவர்களின் அகமனச்சூழலை பெரிதும் ஆட்கொண்டிருப்பது புறக்காரணிகளே. பெற்றோர்களின் அன்புச் சூழலையும் ஆசிரியர்களின் அறிவுச் சூழலையும் கடந்து பிற புறச்சூழல்கள் தான் இன்றைய சிறுவர்களின் வாழ்க்கை முறையைத் தீர்மானிக்கும் காரணிகளாக அமைகின்றன. உலகத்தைக் கதவு திறந்து காட்டும் கையடக்க கருவிக்குள் தன்னை அடக்கமாக்கிக் கொண்டு உணர்வுகளை மட்டுமே உற்சாகப்படுத்திக் கொண்டிருக்கின்றனர். அறிவு வயப்படும் வாய்ப்பற்றவர்களாக வலம் வருவதால் தான் சிறுவர்களின் குறிப்பாக மாணவர்களின் ஆளுமை வளர்சசி ஒற்றை முனையிலேயே நின்றுவிடுகிறது. பன்முகத்தன்மையிலான வளர்ச்சிக்கு வழியறியாத நிலையினால்தான் சிறுவயதிலேயே மன அழுத்தங்கள், வன்முறைகள், தற்கொலைகள், குடும்பத்தில் இணக்கமின்மை போன்ற விரும்பத்தகாத விளைவுகள் நாளும் வளர்ந்துகொண்டே இருக்கின்றன. மேற்சொன்ன எதிர்மறைப் போக்குகளை விமரிசனம் செய்வதை விடுத்து சிறுவர்களுக்கான ஆளுமை வளர்ச்சிக் குறித்து நேர்முறைச் சிந்தனை அடிப்படையிலான ஆய்வை முன் வைக்கிறது இக்கட்டுரை.

*நாட்டுப்புற இலக்கியத் துறையிலிருந்து வளர்ச்சி பெற்று இன்றைக்குத் தனிப்பெரும் துறையாக விளங்குவது சிறார் இலக்கியத் துறை. அத்தகைய சிறார் இலக்கியங்கள் மாணவர்களின் பன்முக ஆளுமை வளர்ச்சியில் முக்கியப் பங்காற்ற முடியும் என்பதை கருதுகோளாகக் கொண்டு இக்கட்டுரை அமைகிறது. உணர்வுசார் மேலாண்மையை வளர்ப்பதன் வாயிலாகவே பன்முக ஆளுமைப் பெற்றவர்களாக சிறுவர்களை உருவாக்க முடியும். 'ஒரு மனிதன் தனியாக இருக்கும்போது எதை சிந்திக்கிறானோ அதுதான் அவனது வாழ்க்கையைத் தீர்மானிக்கிறது' என்பார் சுவாமி விவேகானந்தர். அவ்வகையில் சிறுவர்களின் தனிமைச் சிந்தனையை மாற்றியமைக்கும் ஆற்றல் அவர்களுக்கான இலக்கியத்திற்கு உண்டு. பாட்டிகளிடம் கதை கேட்கும் அனுபவத்திலிருந்து அவர்களுக்கான இலக்கியப் பயணம் தொடங்குகின்றது. அத்தகைய இலக்கிய வாசிப்பிற்கும் சிறுவர்களுக்குமான இடைவெளியை கள ஆய்வின் வழி எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகிறது.*

*" இன்று குழந்தைகள் நீங்கள் - எனினும்*
*இனி இந்த நாட்டினை ஆளப்பிறந்தீர்! "*

*என்றார் பாரதிதாசன். (இசையமுது, சிறார் பொறுப்பு)*

*ஆள வேண்டியவர்களுக்கு வாழ வேண்டிய வழியைச் சொல்லித்தர வேண்டும். 'குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்று' என்பார்கள். எந்த நாட்டில் குழந்தைகள் சிறப்பாகக் கவனிக்கப்படுகிறார்களோ அந்த நாடு எல்லா வகையிலும் சிறப்புப் பெறுகின்றது. குழந்தைகளைத் திசைதிருப்புவதாக ஊடகங்களையும், இணைய வாய்ப்புகளையும் குறை சொல்லிக் கொண்டிருப்பதை விட அதற்கு மாற்றாக, குழந்தைகளின் மேம்பாட்டிற்கு உதவக் கூடியதான ஒன்றினை அவர்களுக்கு அடையாளம் காட்டுவதே சிறந்த முயற்சியாகும். குழந்தைகளின், சிறுவர்களின் முக்கியப் பணி கல்வி வழியில் அறிவை மேம்படச் செய்தலாகும். அத்தகையக் கல்வியோடு நடத்தை விதிமுறைகளையும், ஒழுக்க நியதிகளையும், இணைத்துச் செல்வதே சிறந்த வழிகாட்டலாக அமைய முடியும். இவ்வகையில் அவர்கள் சிறந்தவர்களாக வளர அவர்களுக்கான இலக்கியம் முக்கியப் பங்காற்ற முடியும்.*

*ஒற்றைப் பிள்ளை வீடு என்கிற சிறுகுடும்ப அமைப்பில், பாட்டி கதைகள் சொல்லும் கூட்டுக் குடும்பச் சூழலும் பாடல்கள் பாடி கூடி விளையாடும் கிராமத்துச் சூழலும் மறைந்து கொண்டிருக்கின்ற நிலையில் வாசிப்பு ஒன்றே குழந்தைகளை, சிறுவர்களை வளப்படுத்த முடியும். குழந்தைகள் தான் எதிர்கால உலகை உருவாக்கும் சிற்பிகள். இங்கு,*

*"இன்றையச் சிறுவர்களே நாளையப் பெரியவர்கள். நாட்டின் நாளைய வளர்ச்சியும் வலிமையும் அவர்களைப் பொருத்தே அமைய முடியும். எனவே இன்றைய சிறுவர்களின் சிந்தனைக்கு உரமூட்டும் சிறந்த நூல்கள் பெருமளவில் வெளிவர வேண்டும். அந்நூல்கள் அவர்களின் அறிவு வளர்ச்சிக்கும், மன, பண்பாட்டு வளர்ச்சிக்கும் அடித்தளமாக அமைய வேண்டுவது அவசியம்" (சிறுவர் இலக்கியச் சிறப்புகள், ப.93)*

*என்கிற மணவை முஸ்தபாவின் கூற்று நினைவு கூறத்தக்கது.*

*உலகில் எல்லோரும் குழந்தைகளை விரும்புவர். அவ்வாறு எல்லோராலும் விரும்பப்படும் குழந்தைகள் விரும்பும் வகையில் இலக்கியம் படைப்பது அரிய கலை. குழந்தைகளாக மாறி அவர்களது மனநிலையிலிருந்து பாடும் பாடல்களும், அமையும் கதைகளுமே நிலைத்த வெற்றியைப் பெறுகின்றன. குழந்தைகளுக்கான அல்லது சிறுவர்களுக்கான இலக்கியம் என்பது அவர்களின் மகிழ்ச்சியையும் வளர்ச்சியையும் கருத்தில் கொண்டு படைக்கப்படுதல் வேண்டும்.*

*"மகிழ்ச்சியூட்டுதல், அவர்களின் உலகோடு உலாவி வருதல், மனவெழுச்சி விரிவாக்கத்துக்கு உல்லாசமிடல், கிளர்ந்தெழும் ஊக்கலோடு சங்கமிக்கச் செய்தல் முதலியவை சிறுவர் இலக்கியங்களின் பரிமாணங்களாகின்றன. "*

*என்பார் ஜெயராசா (சிறுவர் இலக்கியம், ப. 93). அவ்வகையில் சிறார்களுக்கான இலக்கியப் படைப்புகள் என்பவை, சிறார் உள்ளத்தோடு சிறார்களுக்கான மொழிநடையில் அவர்களது உலகை விளக்குவனவாக அமைதல் வேண்டும். அவையே உண்மையான சிறார் இலக்கியங்களாக நிலைபெறும். அளவற்ற அறிவுரைகளைக் கொண்டு அமைபவை, குழந்தைகள் உலகை விட்டு விலகிச் சென்றுவிடுகின்றன என்பதும் எண்ணத்தக்கது.*

*12 வயது வரை உள்ளவர்களை குழந்தைகள் என்று குழந்தை மையக் கல்வியாளர்கள் குறிப்பிடுவர். 12 முதல் 18 வயது வரை சிறுவர்களாகக் கருதப்படுகின்றனர். இதனடிப்படையில் சிறார் இலக்கியம் என்பது பொதுச் சொல்லாடலாக, மழலை, குழந்தை, பாலர் சிறுவர் எனும் பல நிலைகளை உள்ளடக்கியதாக இங்கு கையாளப்படுகிறது. சிறார் இலக்கியத்தினை வயது அடிப்படையில் வகைப்படுத்த முடியும் என்பதால்தான மேற்சொன்ன பொதுச் சொல்லாடல் தேவைப்படுகிறது. கவிஞர் செல்வகணபதி 40 ஆண்டுகாலம் கடினமாக உழைத்துத் தாம் எழுதிய சிறுவர் பாடல்களிலிருந்து 283 பாடல்களைத் தெரிந்தெடுத்து அவற்றை மூன்று தொகுதிகளாக வெளியிட்டுள்ளார். அவை,*

- *மலரும் மொட்டுக்கள் (3 முதல் 8 வயது வரை)*
- *வளரும் பூக்கள் (9 முதல் 11 வயது வரை)*
- *மணக்கும் பூக்கள் (12 முதல் 14 வயது வரை)*

*என வயது குறிப்பிடப்பட்டு வகைப்படுத்தப்பட்டிருப்பது இங்கு இணைத்துப் பார்க்கத்தக்கது. (சிறுவர் இலக்கியச் சிறப்புகள், ப.59)*

*நினைவாற்றலால் வரும் அறிவும் சிந்தனை வளர்ச்சியினால் வரும் அறிவும் ஒன்றல்ல. நினைவாற்றலால் வருவது சாதாரண அறிவு. மனப்பாட அறிவு மறக்கும் அறிவு. சிந்தனை வளர்ச்சியால் வரும் அறிவு பேரறிவு. மறக்காத அறிவு, மெய்யறிவு. இத்தகைய அறிவினைத்தான்,*

*“நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்*
*உண்மை அறிவே மிகும்” (குறள் – 373)*

*என்று உண்மை அறிவாகப் பார்க்கிறார் திருவள்ளுவர். இன்றையக் கல்விச்சூழல் மனப்பாடக் கல்வியை அதாவது தற்காலிக அறிவை முதன்மைப்படுத்தியே அமைந்துள்ளது. இத்தகையக் கல்வி வன்முறையிலிருந்து மாணவர்களை மீட்கவும் இயற்கை அறிவை, உண்மை அறிவை மேம்படுத்தவும் சிறார் இலக்கியம் முக்கியப் பங்காற்ற முடியும். கல்வி வன்முறைச் சூழலில் பெற்றோர்களும், ஆசிரியர்களும் வன்முறையாளர்களாகவே காட்சித் தருகின்றனர். மாணவர்களுக்கான விடுமுறை நாட்களைக்கூட அரசு உத்தரவுகளில்தான் நிலைநாட்ட முடிகிறது. இத்தகைய நிலையில்தான் மாணவர்களின் மன இறுக்கத்தைப் போக்கவும் முழுமையான வளர்ச்சிக்கு வித்திடவும் சிறார் இலக்கியம் தேவைப்படுகிறது.*

*உடல் வளர்ச்சி, சிந்தனை வளர்ச்சி, சமூக வளர்ச்சி, மன உணர்வு வளர்ச்சி, ஒழுக்க வளர்ச்சி, தொழிலார்வ வளர்ச்சி என அனைத்து நிலைகளிலும் மாணவர்களின் வளர்ச்சிக்கு அடித்தளம் அமைத்துத் தரக் கூடியதாக சிறார் இலக்கியம் விளங்குகின்றது.*

*சிறார் இலக்கிய வாசிப்பின் தேக்கநிலை சிறுவர்களுக்கான ஆளுமை வளர்ச்சியில் ஒரு இடைவெளியை அல்லது வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளது. அந்த இடைவெளியை அல்லது வெற்றிடத்தை செல்பேசிகளும் தொலைக்காட்சிகளும் கையகப்படுத்தியுள்ளன. இணையம் என்ற பெயரில் வையக வலைவிரிப்பு அவர்களுக்கான சிறைபிடிப்பாகிவிட்டது. அறிவு சார்ந்த செயல்பாட்டை முதன்மையாகக் கொண்டவர்கள் மாணவர்கள் என்கிற நிலையில் அவர்களை அதே பாதையில் நிலை நிறுத்துவதுதான் சிறார் இலக்கிய வாசிப்பு. இது தேர்வுகளற்ற நெருக்கடியற்ற வாசிப்பு.*

*பதிப்பகங்கள் ஆண்டுதோறும் சிறுவர்களுக்கான நூல்களை நூற்றுக்கணக்கில் வெளியிட்டுக் கொண்டிருப்பினும் சிறுவர் இலக்கியம் சார் வெளியீடுகளுக்கும் மாணவர்களின் இலக்கியத் தேடல் அல்லது வாசிப்பிற்கும் ஒருவிதமான இடைவெளி இருப்பதாகவே அவதானிக்க முடிகிறது. இது குறித்து முழுமையாக அறிவதற்கு கள ஆய்வு பொருத்தமுடையதாகத் தோன்றியது. எனவே வினாநிரல் அடிப்படையில் பலதரப்பட்ட மாணவர்களைச் சந்தித்து அவர்களிடமிருந்து பெறப்பட்ட தரவுகளடிப்படையில் பல்வேறு முடிவுகள் முன்வைக்கப்படுகின்றன. இம்முடிவுகள் கள ஆய்வு வழி மாணவர்களை நேரடியாகச் சந்தித்து அவர்களுக்கான இலக்கியம் குறித்து கலந்து உரையாடியதன் விளைவாகக் கண்டுணரப்பட்ட அடிப்படை உண்மைகளாகும்.*

*மாணவர்கள் ஆண், பெண் என இருபாலர் நிலையிலும், அரசுப்பள்ளி, தனியார் பள்ளி எனும் நிலையிலும், கிராமச் சூழல், நகரச் சூழல் எனும் நிலையிலும் தெரிவு செய்யப்பட்டு*

*அவர்களிடமிருந்து தரவுகள் பெறப்பட்டன. 300 மாணவர்களிடமிருந்து 25 வினாக்கள் வழி தரவுகள் பெறப்பட்டன. அத்தரவுகளின் வழி பின்வரும் செய்திகளை உணர முடிகிறது.*

*கள ஆய்வு முடிவுகள்:*

- *அன்றிலிருந்து இன்று வரை கதை சொல்லிகளாக பாட்டிகளும் அம்மாக்களுமே விளங்குகின்றனர். ஒழுக்கம் சார்ந்த, சூழல் சார்ந்த சிந்தனை வளாச்சியைத் தூண்டுகிறவர்களாக பெண்களே செயல்படுகின்றனர்.*
- *பாட்டிகளிடம் கதை கேட்பதை நகர்ப்புற மாணவர்களும் கூட பெருமளவில் பதிவு செய்துள்ளனர். ஆனால் அங்குதான் முதியோர் இல்லங்களும் பெருகி வருகின்றன. சிறுவர்களாக இருக்கும்போது பிள்ளைகளை வளர்க்கத் தேவைப்படுகிறவர்கள் அவர்கள் வளர்ந்த பிறகு வீடு கடத்தப்படுகிறார்களோ என்று எண்ணத் தோன்றுகிறது.*
- *பாடநூல்களைத் தவிர பிற நூல்களையும் வாசிக்கும் பழக்கம் எல்லா மாணவர்களிடமும் மேலோங்கியுள்ளது. ஏறத்தாழ 98 விழுக்காடு மாணவர்கள் இதனை உறுதிப்படுத்தியுள்ளனர். ஆனால் அவர்களது வாசிப்புச் செய்தித் தாள்களைத் தாண்டி 12 விழுக்காட்டிற்கு மேல் செல்லவில்லை என்பது கவனிக்கத் தக்கது.*
- *குறிப்பாக நகரச் சூழலில் உள்ள மாணவர்களைவிட கிராமப்புற மாணவர்கள் அதிக அளவில் நூலகம் செல்வதாகக் கிடைத்த தரவு வியப்பு சார்ந்த மகிழ்ச்சியைத் தருகின்றது.*
- *நகர்ப்புற மாணவர்கள் நூலகம் செல்லாமைக்கான காரணமாகக் கூறுவது வீட்டுபாடத்தையே! வீட்டுப் பாடம் என்பதிலும் குறிப்பாக எழுதிக் கொண்டேயிருத்தலை மாணவர்கள் பெருஞ்சுமையாகவும், வெறுப்பாகவும் பதிவு செய்துள்ளனர்.*
- *பன்னிரெண்டு வயதிற்கு உட்பட்டவர்கள் ஓய்வு நேரத்தை தொலைக்காட்சியிலும் செல்பேசிகளிலுமே செலவிடுகின்றனர். இதற்கான பெற்றோர்களின் அனுமதி அவர்களது புறச்சூழலை தக்கவைத்துக் கொள்வதற்கான தந்திரப் புத்தியிலிருந்து தான் தொடங்குகிறது. தன்னை விட்டால் போதும் என்றே குழந்தைகளிடம் செல்பேசிகள் திணிக்கப்படுகின்றன.*
- *மாணவர்கள் விளையாடுகின்ற நேரத்தைவிட தொலைக்காட்சிப் பார்க்கின்ற நேரம் மிகுதி என பதிவாகியுள்ளது. மீண்டும் பாரதி 'ஓடி விளையாடு பாப்பா, நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா' என்று உரத்துச் சொல்ல வேண்டும் போலும். இந்தியா சர்க்கரை நோயாளிகளின் சொர்க்கமாக விளங்குவதற்கான காரணம் அவர்கள் நீண்ட நேரம் தொலைக்காட்சி முன் அமர்ந்திருப்பது என ஒரு செய்தி ஊடகம் விளக்குகிறது. இந்நிலையில் 14 வயதிற்குட்பட்ட மாணவர்களும் ஓய்வு நேரத்தின் பெரும்பகுதியை தொலைக்காட்சி முன் செலவிடுவது என்பது வருந்தத்தக்கது.*
- *சிறார் இலக்கியம் என இவர்களுக்கென்று தனியாக ஒரு இலக்கிய வகை இருப்பதை ஏறக்குறைய எல்லா மாணாக்கரும் அறிந்துள்ளனர். அதில் கதைகள் தான் மாணவர்கள் மனதில் முதலிடம் பிடித்துள்ளது.*
- *செய்தித்தாள்களோடு சிறுவர்களுக்கான இணைப்பிதழாக வருவனவற்றுள் இடம்பெறும் பகுதிகள் அடிப்படையில் மாணவர்களை அதிகம் ஈர்ப்பதாக விடுகதைகள், போட்டிகள், வரைதல் ஆகியன முறையே மூன்று இடங்களைப் பெற்றுள்ளன.*
- *சிறப்பாக நகர்ப்புற மாணவர்கள் தான் அதிக அளவில் விடுகதைகளால் ஈர்க்கப்பட்டுள்ளனர். சிறுவர்களுக்கான நூல்களை அதிக அளவில் வீடுகளில் வைத்திருப்பவர்கள் நகர்ப்புற மாணவர்களே. ஆனால் அவற்றை முழுமையாக வாசித்தவர்கள் என்ற அடிப்படையில் கிராமப்புற மாணவர்களே முன்னிலையில் உள்ளனர்.*
- *புத்தகக் கண்காட்சிக்குச் செல்பவர்களும், செல்ல விரும்புகிறவர்களும் மிகுதியாக இருப்பது பாராட்டுதலுக்குரியது.*
- *தமிழ்ப் பாடநூல்களில் கூட கதைகளையே விரும்புவதாக 82 விழுக்காடு மாணவர்கள் குறிப்பிட்டுள்ளார். எனவே மாணவர்கள் (சிறுவர்கள்) வாசிப்பதற்கு உரிய விருப்புடன் திகழ்கின்றனர். அதிலும் குறிப்பாக கதைகளால் அதிகம் ஈர்க்கப்பட்டுள்ளனர்.*

*அவ்வகையில் சிறுவர்கள் குறிப்பாக மாணவர்களிடம் குற்றச் செயல்கள் அதிகரித்து வரும் இன்றையச் சூழலில் அவர்களைச் சரியானப் பாதையில் நிலைநிறுத்த, பாடத்திட்டங்களைக் கடந்த வாசிப்புச் சூழல்தான் முதன்மைப் பங்காற்ற முடியும். அவர்களுக்கான, கதைகள் வழி பன்முக ஆளுமைத் தன்மையை மேம்படுத்த இயலும். மதிப்பெண் வன்முறையிலிருந்து மாணவர்களை மீட்டெடுக்க இந்த வாசிப்பின் மீது அவர்கள்*

கொண்டுள்ள விருப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம். இத்தகையச் சிறார் இலக்கிய வாசிப்பிற்கான சூழலையும் வாய்ப்பினையும் வழங்கினால் அறிவார்ந்த மாணவர்களை மட்டுமல்ல ஒழுக்கம் சார்ந்த மாணவர்களையும் உருவாக்க முடியும். மாணவர்களை மாணவர்களாக வாழ அனுமதிப்பதற்கு அவர்களுக்கான கதைகளும் பாடல்களும்தான் சிறந்த வழி என்பதை இத்தகைய ஆய்வின் வழி உறுதி செய்யலாம்.

சில முடிவுகள்

- சிறுவர்கள் பிறருடன் சமூக வாழ்வில் பொருந்திச் செயல்பட ஆளுமைத் திறன் அவசியமாகிறது.

- சிறுவர்களின் ஆளுமைத்திறனில் பெற்றோரின் கல்வி, சமூகப் பொருளாதார நிலை, பெற்றோர்களின் அளவுக்கதிகமான எதிர்பார்ப்பு போன்றவை அதிகளவில் ஆதிக்கம் செலுத்துகின்றன.
- சிறுவர்கள் நேர்மையான, இசைவான ஆளுமை வளர்ச்சியைப் பெற வீடு, சமூகம், பள்ளி ஆகியன ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்.
- சிறார் இலக்கியங்களை நோக்கி சிறுவர்களை மடைமாற்றம் செய்தால் அவர்களின் ஆளுமைத் திறன் மேம்படும்.
- ஆளுமைத் திறன் பெற்றவர்களின் சிறப்பு குணங்களான சிந்தனைத் திறன், நல்லொழுக்கம், பிறர்பால் அன்பும் பரிவும் கொண்ட மனப்போக்கு ஆகியவற்றை சிறார் இலக்கிய வழி போதிக்க இயலும்.
- இன்றைய தாய்மார்கள் காணாமல் போன கதை சொல்லிகளை மீட்டெடுக்க வேண்டும்.
- சிறுவர் இலக்கிய வாசிப்பைப் பெற்றோர் உடனிருந்து படித்து ஊக்கப்படுத்த வேண்டும்.
- பாடச் சுமைகளும் தேர்வுகளில் தன் பிள்ளைதான் முதலிடம் பெற வேண்டும் என்கிற கல்வி வன்முறையும் அவர்களுக்கே உரிய சிறார் இலக்கியத்தை வாசிப்பதற்கான வாய்ப்பை அற்றுப் போகச் செய்துவிட்டது.
- குறிப்பாகத் தங்கள் பிள்ளைகள் மதிப்பெண்களால் அல்ல, மனித மதிப்புகளால் உயர வேண்டும் என்பதை பெற்றோர் மனதில் கொள்ள வேண்டும்.
- சிறுவர்களுக்கான இலக்கிய வாசிப்பு என்பது வெகுவாகக் குறைந்து போய்விட்டது. இன்றையச் சூழலிலும் ஜப்பானியர்கள் சிறுவர்கள் முதல் பெரியோர் வரை படக் கதைகளை வாசிப்பதில் கொண்டிருக்கிற ஆர்வத்தை நம்மவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.
- இறுக்கமான படிப்புச் சூழலில் மன இலகுவாக்கத்திற்குச் சிறுவர் பாடல்களும், கதைகளுமே துணை செய்யும். இச்செயல் மட்டுமே சிறுவர்களை படிப்புச் சூழலுக்குள் உட்படுத்திக் கொண்டே அவர்களை பக்குவப்படுத்தும். பிற எந்த மடைமாற்றச் சிந்தனையும் அவர்களை படிப்புச் சூழலுக்கு வெளியேதான் இட்டுச் செல்லும்.
- செல்பேசி விளையாட்டுகளில் மூழ்கிக் கிடக்கும் சொல் பேச்சுக் கேட்காத சிறுவர்கள் மிகுதியாகிவிட்டனர். இவர்களை நல்வழிப்படுத்திய இதமான இரவு நேர பாட்டிக் கதைகள் பழங்கதையாகிப் போய்விட்டது. சிறுவர் இலக்கியத்தை ஊக்குவிப்பதற்கான முயற்சியை அரசு கட்டாயமாக மேற்கொள்ள வேண்டும். இம்முயற்சியின் விளைவாக ஒழுக்கமுடைய சந்ததி உருவாகும்.

துணை நின்ற நூல்கள்


1. பூவண்ணன், (2004), சிறுவர் இலக்கியச் சிறப்புகள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு.
2. ஜெயராசா சபா., (2011) சிறுவர் இலக்கியம், குமரன் புத்தக இல்லம், சென்னை.
3. *Hollindale, P., (1997) Signs of Childness in Children's Book (Stroud: Thimble Press).*
4. *Hunt, P. (ed.) (1992) Literature for children: Contemporary Criticism (London: Routledge).*

*Reference*

*1.Bhoovannan, (2004), Children's Literature Specialties, Manivaskar Publishing House, Chennai, First Edition.*

*2.Jayarasa Sabha., (2011) Children's Literature, Kumaran Book House, Chennai.*

*3.Hollindale, P., (1997) Signs of Childhood in Children's Books (Stroud: Thimble Press).*

*4.Hunt, P. (ed.) (1992) Literature for children: Contemporary Criticism (London:Routledge).*

நிதி சார் கட்டுரையாளர் உறுதிமொழி/*author contribution statement:* இல்லை/*NIL.*

கட்டுரையாளர் நன்றியுரை/ *author acknowledgement:* இல்லை/*NIL.*

கட்டுரையாளர் உறுதிமொழி / *Author Declaration:* இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதி அளிக்கிறேன். / *I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.*

********* ********* ********** ********* ********* ********** ********** **********